**ஏறாவூர் நகர சபை**
**மட்டக்களப்பு மாவட்டம்**

-----------------------------------

## 1 நிதிக்கூற்றுக்கள்

## 1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2015 ஆம் ஆண்டு நிதிக்கூற்றுக்கள் 2016 ஏப்ரல் 18 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததோடு கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 செப்தெம்பர் 29 இல் சபையின் செயலாளருக்கு வழங்கப்பட்டது.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து ஏறாவூர் நகர சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும், அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.3 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

மீளாய்வாண்டிற்காகச் செலுத்த வேண்டிய கணக்காய்வுக் கட்டணத்திற்காகரூபா 86,650 கணக்குகளில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 ஆவணச்சான்றுகள் இன்மை

நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட பின்வரும் ஒவ்வொரு விடயத்திற்கும் எதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| | விடயங்கள் | பெறுமதி (ரூபா) | சான்றுகளின்மை |
|---|---|---|---|
| (i) | காணி கட்டிடம் | 85,739,626 | காணி உரிமைப்பத்திரம் |
| (ii) | பொறித் தொகுதியும், இயந்திரங்களும் | 4,107,929 | நிலையான சொத்துப் பதிவேடு |
| (iii) | மோட்டார் வாகனங்கள் | 2,492,615 | நிலையான சொத்துப் பதிவேடு |
| (iv) | தளபாடம் பொருத்துகள் | 3,289,978 | நிலையான சொத்துப் பதிவேடு |

### 1.3.3 சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | | இணக்கமின்மை |
|---|---|---|
| (அ) | நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 255 அத்தியாயம் 177(2) ஆம் பிரிவு | சபையின் 2014 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களின் சுருக்கத்தை அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு 2015 திசெம்பர் 31 ஆம் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2009 செப்தெம்பர் 18 ஆம் திகதிய பிஎப்/437 ஆம் இலக்க பொதுநிதி சுற்றறிக்கை | வாகனங்களின் காப்புறுதி தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திடமிருந்து அல்லது வரையறுத்த இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்திலிருந்து பெற்றுக் கொள்ள வேண்டிய போதிலும் இதற்கு முரணாக மீளாய்வாண்டின் போது 03 வாகனங்களுக்கான காப்புறுதி பத்திரமானது தனியார் காப்புறுதி நிறுவனங்களிடமிருந்து ரூபா 169,410 தொகை செலுத்தி பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. |
| (இ) | IAI/2002/02 ஆம் இலக்க 2002 நவம்பர் 28 ஆந் திகதிய திறைசேரி சுற்றறிக்கை | கணனிகள் மற்றும் கணனி உதிரிப்பாகங்கள், கணனி மென்பொருட்கள் என்பவற்றை பதிவதற்காக தனியான பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுகளின்படி 2015 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானத்திலும் கூடிய மீண்டுவரும் செலவினம் ரூபா 258,607 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் வருமானத்திலும் கூடிய மீண்டு வரும் செலவினம் ரூபா 402,649 ஆக இருந்தமை நிதி விளைவுகளில் ரூபா 144,042 முன்னேற்றத்தைக் காட்டுகின்றது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 வருமான சேகரிப்பு செயலாற்றல்

சபையினால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடர்பான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் கீழே காட்டப்பட்டுள்ளது.

| வருமான விடயம் | 2015 ஆம் ஆண்டிற்கு மதிப்பிடப்பட்டது (ரூபா) | 2015 ஆம் ஆண்டில் அறவீடு செய்யப்பட்டது (ரூபா) | 2015 திசெம்பர் 31இல் திரண்ட நிலுவை (ரூபா) |
|---|---|---|---|
| வீத வரிகள் | 2,250,000 | 2,070,430 | 9,729,786 |
| இறைச்சிக்கடை குத்தகை | 1,250,807 | 1,367,037 | 1,953,970 |
| இறைச்சிக்கடை வாடகை | 400,000 | 593,700 | 3,588,115 |
| களியாட்ட வரி | 125,000 | 166,270 | 949,490 |

2.2.2 வீதவரிகள் மற்றும் வரிகள்

---------------------------------

நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 255) 160 ஆம் பிரிவுக்கு அமைய, நகர சபையின் அதிகாரத்திற்குட்பட்ட இடங்களில் உள்ள காணிகள் மற்றும் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள், கட்டிடங்கள் என்பவற்றின் மீது 2010 ஆம் ஆண்டு தொடக்கம் 2015 ஆம் ஆண்டு இறுதிவரை ரூபா 9,729,786 கூட்டு மொத்தமான வீதவரிகள் அறவிடப்பட்டிருக்கவில்லை.

2.2.3 படமாளிகை வரி

---------------------

ஒரு படமாளிகையிலிருந்து 2013 ஆம் ஆண்டு மற்றும் 2014 ஆம் ஆண்டுகளிற்கு அறவிட வேண்டிய தமாஷா வரி நிலுவை ரூபா 178,299 தொகையை அறவிட சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3. செயற்பாட்டு மீளாய்வு

---------------------------

3.1 முகாமைத்துவ பலவீனம்

-------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2015 ஆம் ஆண்டில் அரசாங்க நிர்வாக, மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் நல்லாட்சி அமைச்சிடமிருந்து ரிப்பர், Short Wheel Base Crew Cab, பெக்கோ லோடர், போன்றன நன்கொடையாகக் கிடைக்கப் பெற்றிருந்தும் அவற்றின் உரிமையை சபையின் பெயருக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபைக்குச் சொந்தமான ரக்டர் ஒன்றும் லேன்ட் மாஸ்டர் ஒன்றும் ஐந்து வருடங்களுக்கு மேலாக பழுதடைந்த நிலையில் காணப்படுகின்றது. அவற்றை திருத்தி பயன்படுத்துவதற்கு அல்லது ஏலத்தில் விற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) நகர சபையில் 76 சந்தர்ப்பங்களில் பல்வேறு தேவைகளுக்காக நகர சபை ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 341,287 தொகையான முற்பணங்களை தீர்த்து வைப்பதற்கு 14 ஆண்டுகளுக்கு மேலாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

4 கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்

-----------------------------------------------

4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

--------------------------

பாதீடு செய்யப்பட்ட வருமானம் மற்றும் உண்மையான வருமானத்திற்கும் இடையில் 51% தொடக்கம் 238% வரையான வீதத்தில் பாரிய முரண் அவதானிக்கப்பட்டமையினால் பாதீடானது முகாமையின் ஒரு வினைத்திறனான கட்டுப்பாட்டுக்கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

5 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

-----------------------------------------

கீழ்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு
(இ) வருமான முகாமைத்துவம்
(ஈ) பாதீட்டுக் கட்டுப்பாடு